1979 பிப்ரவரி 13[

திரு. அ. ரகுமான்கான் : தமிழ்தான் மத்திய அரசின் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்பது எங்கள் கட்சியின் கருத்து.

திரு. ர. ஜெபமணி : காந்தியடிகள் சொன்னதை ஒப்புகொள்கிறேன் என்று திரு. ரகுமான்கான் அவர்கள் சொல்லுகிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : நான் அப்படிச் சொல்லவில்லை.

திரு. ர. ஜெபமணி : நீங்கள் சிறு பிள்ளைகள். அதிலேயே ஊறிவிட்டீர்கள். காரணம், குதிரைக்கு கடிவாளம் போட்ட மாதிரி. ஆனால் நீங்கள் நாளடைவில் ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. நீங்கள் சொல்வதை உருப்படியாக கடைசிவரை வைத்துக்கொண்டதில்லை. திராவிட நாடு என்று இருபது ஆண்டுகளாக சொன்னீர்கள். காமராஜ் பெரியாரிடம் கேட்டார், திராவிட நாடு எங்கே இருக்கிறது, சொல்லுங்கள், வாங்கித் தருகிறேன் என்று. அப்படி இருந்தால் நான் ஏன் கேட்கிறேன் என்றார் அவர். காங்கிரசுக்கும் எனக்கும் சண்டை வந்து விட்டது, காங்கிரஸை எதிர்த்து எதிர்க்கடை போடுவதுதான் என் கொள்கை என்றார்கள். திராவிட நாடா வெங்காய நாடு என்று சொல்லவில்லையா ?

[பிற்பகல் 1–30.]

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து அமருங்கள், திரு. ஜெபமணி அவர்கள், நீங்களும் அமருங்கள். உங்களுக்கு அனுமதித்த நேரம் முடிந்து விட்டது. 20 நிமிடம் கொடுக்கப்பட்டது. 30 நிமிடத்துக்கு மேலாகிவிட்டது. எல்லோரும் சிரித்துக் கொண்டு கேட்டுக் கொண்டிருந்தார்கள், போதும், இத்துடன் முடித்துவிடுங்கள். பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

2. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(இ) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—திருத்தங்கள்

ஆளுநர் அவர்களின் பேருரைக்கான நன்றி அறிவிப்புத் தீர்மானத்திற்குத் திருத்தங்களை, 14—2—1979 ஆம் தேதி புதன் கிழமை, காலை 11 மணி வரை கொடுப்பதற்கு கால அளவு நீட்டிக்கப் பெற்றுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் மேலும் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு திருத்தங்கள் கொடுத்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றை 15—2—1979 ஆம் தேதியன்று முன் மொழிய வேண்டும்.

[1979 பிப்ரவரி 13

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9--00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(6) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

85. விற்பனைக் குழுவின் பணிகளைச் செய்தல், மற்றும் அதிகாரத்தைச் செலுத்துவதற்காகத் தனி அதிகாரிகளை நியமிப்பது குறித்து 2—9—1978 ஆம் தேதியிடப்பெற்ற வேளாண்மைத் துறையின் அரசாணை எண். 1478-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

86. ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர்கள், பணியாளர்களின் நடத்தை குறித்த விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 17—4—1978 ஆம் தேதியிடப்பெற்ற ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 581 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

87. மாற்றியமைக்கப் பெற்ற தமிழ்நாடு தொழிலாளர் நலக் குழுவில் திரு. பி. ஜி. கிட்டு, எம். எல். ஏ. அவர்களை ஒரு உறுப்பினராக நியமிப்பது குறித்து 2—12—1978 ஆம் தேதியிடப்பெற்ற தொழிலாளர்-வேலைவாய்ப்புத் துறையின் அரசாணை எண். 1513-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நலநிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1972) 41 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

88. கன்னியாகுமரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் எல்லா வடிவிலுமுள்ள கச்சா இரப்பரை வேளாண்மை விளைபொருளாக அறிவிப்பது குறித்தும், அம்மாவட்டத்தில் விற்கப்பெறும் எல்லா வகையான கச்சா இரப்பரை விற்பதன் மேல் கட்டுப்பாட்டினைச் செலுத்துவது குறித்தும் 21—11—1978 ஆம் தேதியிடப்பெற்ற வேளாண்மைத் துறையின் 1850 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் விற்பனைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]